# 6th Social Science Lesson 19 Questions in Tamil

## 19. ஆசியா

1. கூற்று 1: உலகின் பரப்பளவில் 30 சதவீதத்தை ஆசியா கண்டம் உள்ளடக்கியுள்ளது.

கூற்று 2: உலக மக்கள்தொகையில் 60 சதவீதத்தை ஆசியா கொண்டுள்ளது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

**(குறிப்பு: ஆசியாவின் பெரும்பாலான நிலப்பரப்பு வடஅரைக்கோளத்தில் பரவியுள்ளது. வற்றாத ஆறுகள் ஆசியாவின் பல்வேறு நிலப்பரப்புகளில் பாய்கின்றன. இந்த ஆற்றுப் பள்ளத்தாக்குகள் நாகரிகங்களின் தொட்டிலாகும்.)**

2. ஆசியாவின் மொத்த பரப்பளவு _________மில்லியன் கி.மீ$^2$ ஆகும்.

A) 36 B) 42 **C) 44** D) 48

**(குறிப்பு: ஆசியா 10° 11' தெற்கு அட்சத்திலிருந்து 81° 12' வடக்கு அட்சம் வரையிலும், 26° 2' கிழக்கு தீர்க்கம் முதல் 169° 40' மேற்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.)**

3. ஆசிய கண்டத்தின் எல்லைகளில் தவறானது எது?

1. வடக்கு - அண்டார்டிக் பெருங்கடல்

2. கிழக்கு – பசிபிக் பெருங்கடல்

3. தெற்கு - இந்தியப் பெருங்கடல்

4. மேற்கு - காகசஸ் மலைகள்

A) அனைத்தும்

B) 2 மட்டும்

C) 4 மட்டும்

**D) 1 மட்டும்**

**(குறிப்பு:ஆசியாவின் வடக்கில் ஆர்டிக் பெருங்கடலும், மேற்கில் யூரல், காகசஸ் மலைகள், செங்கடல், மத்தியத் தரைக்கடல், காஸ்பியன் கடல் மற்றும் கருங்கடல் ஆகியவை எல்லைகளாக அமைந்துள்ளன.)**

4. ________ ஆசியாவை ஆப்பிரிக்காவிடமிருந்து பிரிக்கின்றது.

A) பேரிங் நீர்ச்சந்தி

**B) சூயஸ் கால்வாய்**

C) செங்கடல்

D) மத்தியத்தரைக்கடல்

**(குறிப்பு: பேரிங் நீர்ச்சந்தி ஆசியாவை வட அமெரிக்காவிடம் இருந்து பிரிக்கின்றது.)**

5. ஆசியாவில் நிலத்தால் சூழப்பட்டுள்ள நாடுகள் எத்தனை?

A) 8 B) 10 **C) 12** D) 14

**(குறிப்பு:ஆசியாவில் ஒரு நாடு மட்டும் இரண்டு முறை நிலத்தால் சூழப்பட்டுள்ளது. அதாவது, அந்நாட்டை சூழ்ந்துள்ள அனைத்து நாடுகளும் நிலத்தால் சூழப்பட்டுள்ள நாடுகளாகும்.)**

6. ஆசியாவில் ________ நாடுகள் உள்ளன.

A) 45 **B) 48** C) 51 D) 55

**(குறிப்பு:ஆசியாவின் 48 நாடுகளும் நிலத்தோற்றம் மற்றும் அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை,**

**1. கிழக்கு ஆசியா**

**2. தென்கிழக்கு ஆசியா**

**3. தெற்கு ஆசியா**

**4. தென்மேற்கு ஆசியா**

**5. மத்திய ஆசியா )**

7. ஆசியாவின் இயற்கை அமைப்பினை எத்தனை பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்?

A) 4 **B) 5** C) 6 D) 7

**(குறிப்பு: அவை,**

**1. வட தாழ்நிலங்கள்**

**2. மத்திய உயர் நிலங்கள்**

**3. தெற்கு பீடபூமிகள்**

**4. பெரும் சமவெளிகள்**

**5. தீவுக்கூட்டங்கள்)**

8. கூற்று 1: ஆசியாவிலேயே மிகவும் பரந்து காணப்படும் தாழ்நிலம் சைபீரியச் சமவெளி ஆகும்.

கூற்று 2: அது மேற்கே யூரல் மலைகளிலிருந்து கிழக்கே வெர்கோயான்ஸ்க் மலைத்தொடர் வரை பரந்து காணப்படுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

9. ஆசியாவின் மத்திய உயர்நிலங்கள் துருக்கியிலிருந்து ________ நீர்ச்சந்தி வரை விரிந்து காணப்படுகின்றன.

A) பாஸ்பெரஸ்

B) டோவர்

C) பால்டிக்

**C) பேரிங்**

**(குறிப்பு: ஆசியாவில் இரு மலைமுடிச்சுகள் காணப்படுகின்றன.அவை,**

**1. பாமீர் முடிச்சு**

**2. ஆர்மீனியன் முடிச்சு)**

10. கீழ்க்கண்டவற்றுள் பாமீர் முடிச்சிலிருந்து பரவி காணப்படும் மலைத்தொடர்கள் எவை?

1. இந்துகுஷ் மலைத்தொடர் 2. சுலைமான் மலைத்தொடர்

3. இமயமலைத்தொடர் 4. டியான் ஷன் மலைத்தொடர்

**A) அனைத்தும்** B) 1, 2, 4 C) 2,4 D) 1, 4

**(குறிப்பு: முடிச்சு என்பது மலைத்தொடர்கள் கூடும்/பிரியும் இடங்கள் ஆகும்.)**

11. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) இந்துகுஷ் மலைத்தொடர் மேற்கே எல்பர்ஸ் எனவும் சுலைமான் மலைத்தொடர் தென்மேற்கே ஜாக்ரோஸ் மலைத்தொடராகவும் நீண்டு காணப்படுகிறது.

B) எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இரண்டும் ஆர்மீனியன் முடிச்சில் ஒன்றிணைகிறது.

**C) தாரஸ் மற்றும் போன்டைன் மலைத்தொடர்கள் பாமீர் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.**

D) பெரிய கிங்கன், அல்டாய், வெர்கோயான்ஸ்க், அரக்கன்யோமா போன்றவை ஆர்மீனியன் முடிச்சில் காணப்படும் முக்கிய மலைத்தொடர்கள் ஆகும்.

**(குறிப்பு: தாரஸ் மற்றும் போன்டைன் மலைத்தொடர்கள் ஆர்மீனியன் முடிச்சிலிருந்து பரவிக் காணப்படுகின்றன.)**

12. உலகின் தாழ்வான பகுதி ஆசியாவிலுள்ள _________ கடலில் உள்ளது.

A) கருங்கடல்

B) காஸ்பியன் கடல்

C) பேரிங் கடல்

**D) சாக்கடல்**

**(குறிப்பு: இமயமலைத்தொடர் உலகின் உயரமான மலைத்தொடர் ஆகும். ஆசியாவின் உயர்ந்த சிகரம் எவரெஸ்ட் சிகரம் (8848 மீ) உலகின் உயரமான சிகரமும் இதுவே.)**

13. கூற்று: திபெத் 'மூன்றாம் துருவம்' என்று அழைக்கப்படுகிறது.

காரணம்: அங்கு நிலவும் கடுங்குளிரின் காரணமாகவும், நன்னீரின் மிகப்பெரும் இருப்பிடமாகவும், மக்கள் வாழ இயலாத சூழல் காணப்படுவதாலும் மூன்றாம் துருவம் என்று அழைக்கப்படுகிறது..

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.

**D) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்.**

**(குறிப்பு: திபெத் 'உலகின் கூரை' என்றும் அழைக்கப்படுகிறது. ஆசியாவின் முக்கிய பீடபூமிகளாவன,**

**1. அனடோலிய பீடபூமி (போன்டைன் - தாரஸ் மலை)**

**2. ஈரான் பீடபூமி (எல்பர்ஸ் - ஜாக்ரோஸ்)**

**3. திபெத்திய பீடபூமி (குன்லுன் - இமயமலை)**

14. கைபர் கணவாய் மற்றும் போலன் கணவாய் ஆகியவை முறையே ________ மலைத்தொடர்களில் காணப்படுகின்றன.

A) டோபா காகர், சுலைமான்

**B) சுலைமான், டோபா காகர்**

C) சுலைமான், எல்பர்ஸ்

D) எல்லர்ஸ், சுலைமான்

15. தெற்கு பீடபூமிகளில் மிகப்பெரியது _______ பீடபூமி ஆகும்.

A) தக்காண பீடபூமி

**B) அரேபிய பீடபூமி**

C) ஷான் பீடபூமி

D) யுனான் பீடபூமி

**(குறிப்பு: தெற்கு பீடபூமிகள், வடக்கு பீடபூமிகளைக் காட்டிலும் உயரம் குறைந்து காணப்படுகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த நான்கு முக்கிய தெற்கு பீடபூமிகளாவன: அரேபிய பீடபூமி (சௌதி அரேபியா, தக்காண பீடபூமி (இந்தியா), ஷான் பீடபூமி (மியான்மர்), யுனான் பீடபூமி (சீனா).)**

16. தவறான இணையைத் தேர்ந்தெடு. (சமவெளி-உருவாக்கும் ஆறு)

A) மேற்கு சைபீரியச் சமவெளி - ஓப் மற்றும் எனிசி

B) மஞ்சூரியன் சமவெளி – அமூர்

C) சீன பெரும் சமவெளி – யாங்சி மற்றும் சிகியாங்

**D) மெசபடோமிய சமவெளி – ஐராவதி**

**(குறிப்பு: மெசபடோமிய சமவெளி - யூப்ரடிஸ் மற்றும் டைக்ரிஸ், ஐராவதி சமவெளி - ஐராவதி, சிந்து - கங்கைச் சமவெளி - சிந்து மற்றும் கங்கை.)**

17. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பிலிப்பைன்ஸ், ஜப்பான் மற்றும் இந்தோனேசியா ஆகியன ஆசியாவின் மிகப்பெரிய தீவுக்கூட்டங்களாகும்.

2. அரபிக்கடலில் உள்ள மாலத்தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள், பாரசீக வளைகுடாவில் உள்ள பஹ்ரைன் போன்றவை இந்தியப் பெருங்கடலில் காணப்படும் சிறிய தீவுக்கூட்டங்களாகும்.

3. இலங்கைத்தீவு இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது.

A) அனைத்தும் சரி

B) 2, 3 சரி

**C) 1, 2 சரி**

D) 1, 3 சரி

**(குறிப்பு: இலங்கைத்தீவு வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவின் பசிபிக் கடற்கரையையொட்டி எண்ணற்ற தீவுகள் காணப்படுகின்றன. குரில், தைவான், சிங்கப்பூர் மற்றும் போர்னியோ போன்றவை முக்கியமான தீவுகளாகும்.)**

18. கூற்று 1: ஒன்றிணைக்கப்பட்ட பல தீவுகள், தீவுக்கூட்டம் என அழைக்கப்படுகிறது.

கூற்று 2: இந்தோனேசியா மிகப்பெரியத் தீவுக்கூட்டம் ஆகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

19. ஆசியாவின் வடக்கு நோக்கி பாய்ந்து ஆர்டிக் பெருங்கடலில் கலக்கும் ஆறுகளில் தவறானது எது?

A) ஒப் B) லேனா **C) டைகிரிஸ்** D) எனிசி

**(குறிப்பு:ஆசியாவின் பெரும்பான்மையான ஆறுகள் மத்திய உயர்நிலங்களில் தோன்றுகின்றன. ஒப், லேனா, எனிசி ஆகிய ஆறுகள் குளிர்காலத்தில் உறைந்துவிடுகின்றன.)**

20. யூப்ரடிஸ் மற்றும் டைகிரிஸ் ஆறுகள் ஆசியாவின் எந்தப் பகுதியில் பாய்கின்றன?

A) கிழக்கு ஆசியா

B) தெற்கு ஆசியா

C) மத்திய ஆசியா

**D) மேற்கு ஆசியா**

**(குறிப்பு: தெற்காசியாவில் பாயும் ஆறுகளான பிரம்மபுத்திரா, சிந்து, கங்கை, ஐராவதி ஆகிய வற்றாத ஆறுகள் பனிபடர்ந்த உயர்ந்த மலைகளில் தோன்றுகின்றன. இவை குளிர்காலத்தில் உறைவதில்லை.)**

21. கீழ்க்கண்டவற்றுள் ஆசியாவின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் பாயும் ஆறுகள் எவை?

1. அமூர் 2. ஹோவாங்கோ

3. யாங்சி 4. மீகாங்

**A) அனைத்தும்** B) 1, 3, 4 C) 2, 3, 4 D) 1, 4

**(குறிப்பு: ஆசியாவின் மிக நீளமான ஆறு யாங்சி ஆகும்.)**

22. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. முப்பள்ளத்தாக்கு நீர்த்தேக்கமானது யாங்சி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

2. இஃது உலகின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும்.

3. இது சீனாவின் மின்சார தேவையில் 20 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது.

A) 2, 3 தவறு

**B) 3 மட்டும் தவறு**

C) 1, 3 தவறு

D) எதுவுமில்லை

**(குறிப்பு: இது சீனாவின் மின்சார தேவையில் 10 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது.)**

23. கூற்று 1: வடக்கு ஆசியப் பகுதியில் குளிர்காலம் குறுகியதாகவும், கோடைக்காலம் சற்று குளிர்ந்தும் காணப்படும்.

கூற்று 2: ஆசியாவின் வடகிழக்குப் பகுதியில் மிகக் குளிர்ந்த குளிர்காலமும், மிதவெப்ப கோடை காலமும் காணப்படுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

**(குறிப்பு: வடக்கு ஆசியப் பகுதியில் குளிர்காலம் நீண்டதாகவும், கோடைக்காலம் சற்று குளிர்ந்தும் காணப்படும். இங்கு குளிர்காலம் -37 °C மற்றும் கோடைக்காலம் 10 °C வெப்பநிலை உடையது. இங்கு பனிப்பொழிவு உண்டு (250 மி.மீ - 300 மி.மீ). வடகிழக்குப் பகுதியில் 50 மி.மீ முதல் 250 மி.மீ. மிதமான மழைப்பொழிவும் காணப்படுகிறது.)**

24. பொருத்துக.

| ஆறு | நீளம் (கி.மீ) |
|---|---|
| 1. ஓப் | i) 6,350 |
| 2. எனிசி | ii) 5,464 |
| 3. மீகாங் | iii) 4,350 |
| 4. ஹோவாங்கோ | iv) 4,090 |
| 5. யாங்சி | v) 3,650 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A) | i | ii | iii | iv | v |
| B) | ii | iii | iv | i | v |
| C) | iii | i | iv | v | ii |

**D) v iv iii ii i**

25. பொருத்துக.

| ஆறு | நீளம் (கி.மீ) |
|---|---|
| 1. பிரம்மபுத்திரா | i) 2,900 |
| 2. சிந்து | ii) 3,610 |
| 3. அமூர் | iii) 2,824 |
| 4. கங்கை | iv) 2,525 |
| 5. ஐராவதி | v) 2,170 |

**A) i ii iii iv v**

B) ii iii iv i v

C) iii i iv v ii

D) v iv iii ii i

26. தவறான இணையைத் தேர்ந்தெடு. (ஆறு - பிறப்பிடம் - சேருமிடம்)

1. யாங்சி - திபெத் பீடபூமி - கிழக்குச் சீனக்கடல்
2. ஹோவாங்கோ - திபெத் பீடபூமி - போகாய் வளைகுடா
3. மீகாங் - திபெத் பீடபூமி – தென்சீனக்கடல்
4. எனிசி – தானுவாலா மலை - ஆர்டிக் பெருங்கடல்
5. ஓப் - ஓப் மலை - அல்டாய் வளைகுடா

A) 3 மட்டும்

B) 2, 3

**C) 5 மட்டும்**

D) எதுவுமில்லை

**(குறிப்பு: ஓப் – அல்டாய் மலை - ஓப் வளைகுடா)**

27. தவறான இணையைத் தேர்ந்தெடு. (ஆறு - பிறப்பிடம் - சேருமிடம்)

1. பிரம்மபுத்திரா – இமயமலை - வங்காள விரிகுடா
2. சிந்து – இமயமலை – அரபிக்கடல்
3. அமூர் - சிகா, ஆர்கன் ஆறுகளின் சங்கமம் - டாடார் நீர்ச்சந்தி
4. கங்கை – இமயமலை - வங்காள விரிகுடா
5. ஐராவதி - வடக்கு மியான்மர் - வங்காள விரிகுடா

A) 5 மட்டும்

B) 2, 3

C) 3, 5

**D) எதுவுமில்லை**

28. கூற்று 1: தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகள் பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளாகும்.

கூற்று 2: கோடைக் கால பருவமழைக் காற்றுகள் இந்தியா, வங்காளதேசம், இந்தோ-சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் தெற்கு சீனா ஆகிய இடங்களுக்கு அதிக மழைப்பொழிவைத் தருகின்றன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

**(குறிப்பு: ஆசியாவில், கோடைகாலம் அதிக வெப்பமும் ஈரப்பதத்துடனும், குளிர்காலம், வறண்டும் காணப்படும். கோடைக்காலப் பருவமழையின் சராசரி அளவு 1500 மி.மீ - 2500 மி.மீ ஆகும்.)**

29. இந்தியாவில் உள்ள மௌசின்ராம் ________ அளவு சராசரி மழைப்பொழிவை பெறுகிறது.

A) 15712 மி.மீ

B) 1271 மி.மீ

C) 1871 மி.மீ

**D) 11871 மி.மீ**

**(குறிப்பு: மௌசின்ராம் அதிக மழைப்பொழிவை பெறுவதால், இஃது உலகின் மிக ஈரப்பதம் வாய்ந்த பகுதியாகும்.)**

30. கூற்று 1: நிலநடுக்கோட்டிலும், அதனைச் சுற்றிலும் காணப்படுகின்ற பகுதியிலும் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான காலநிலை உள்ளது.

கூற்று 2: ஆசியாவின் மேற்குக் கடற்கரையோரம் (மத்தியத் தரைக்கடல் ஓரம்) கோடைக்காலத்தில் மழையைப் பெறுகின்றது.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

**(குறிப்பு: ஆசியாவின் மேற்குக் கடற்கரையோரம் (மத்தியத் தரைக்கடல் ஓரம்) குளிர்காலத்தில் மழையைப் பெறுகின்றது. இங்குக் கோடைக்காலம் மிதவெப்பத்துடன் காணப்படும்.)**

31. நிலநடுக்கோட்டுப் பகுதியில் காணப்படும் சராசரி வெப்பம்________.

A) 17° செ B) 22° செ **C) 27° செ** D) 29° செ

**(குறிப்பு: நிலநடுக்கோட்டுப் பகுதியில் குளிர்காலம் இல்லை. இங்கு சராசரி மழைப்பொழிவு 1270 மி.மீ)**

32. கூற்று 1: மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் வறண்ட, வெப்பமான காலநிலை காணப்படுகின்றன.

கூற்று 2: இப்பகுதிகளில் வெப்பநிலை பகலில் அதிகமாகவும், இரவில் குறைந்தும் காணப்படும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

**(குறிப்பு: மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் மழையளவு 25 மி.மீ முதல் 200 மி.மீ வரை வேறுபடுகின்றது.)**

33. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

**A) ஆசியாவில் பாலைவனங்கள் மேற்கு கடற்கரையோரமாகக் காணப்படுகின்றன.**

B) அரேபிய (சௌதி அரேபியா) மற்றும் தார் (இந்தியா மற்றும் பாகிஸ்தான்) பாலைவனங்கள் மிக வெப்பமான பாலைவனங்கள் ஆகும்.

C) கோபி மற்றும் தக்லாமக்கன் பாலைவனங்கள் மிகவும் குளிர்ந்த பாலைவனங்கள் ஆகும்.

D) ஆசியாவின் மிகப்பெரிய பாலைவனம் அரேபிய பாலைவனமாகும்.

**(குறிப்பு: ஆசியாவில் பாலைவனங்கள் மேற்கு கடற்கரையோரமாகக் காணப்படுகின்றன. ஆசியாவில் இரண்டு வகையான பாலைவனங்கள் உள்ளன. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர் பாலைவனம்.)**

34. கூற்று 1: ரூப -அல்-காலி பாலைவனம் உலகின் மிகத் தொடர்ச்சியான மணற்பாங்கான பாலைவனமாகும்.

கூற்று 2: இது சௌதி அரேபியாவின் தென்கிழக்குப் பகுதியில் காணப்படுகிறது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

**(குறிப்பு: பாலைவனப் பிரதேசம் என்பது மிகக்குறைந்த மழைப்பொழிவைப் பெறும் பகுதியாகும். இங்குக் குறைந்த அளவிலேயே தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப்படுகின்றன.)**

35. உலகில் எத்தனை பங்கு எண்ணெய் ஆசியாவிலிருந்து கிடைக்கப்பெறுகின்றது?

A) 1/2 **B) 1/3** C) 1/4 D) 1/5

**(குறிப்பு: எண்ணெய் மற்றும் இயற்கை வாயு மேற்காசிய நாடுகளில் காணப்படுகின்றன. மேற்காசிய நாடுகளிலேயே, ஈரானில் குறிப்பிடத்தக்க அளவில் கனிம வளங்கள் காணப்படுகின்றன.)**

36. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) சீனா மற்றும் இந்தியா அதிக இரும்புத்தாது இருப்புள்ள நாடுகளாகும்.

B) தென்மேற்கு ஆசியாவில்தான் அதிக அளவில் பெட்ரோலிய இருப்புகள் காணப்படுகின்றன.

C) பாக்ஸைட், இந்தியா மற்றும் இந்தோனேசியா நாடுகளில் காணப்படுகின்றது.

**D) இந்தியா உலகிலேயே அதிக அளவில் பாக்சைட்டை உற்பத்தி செய்கின்றது.**

**(குறிப்பு: இந்தியா உலகிலேயே அதிக அளவில் மைக்காவினை உற்பத்தி செய்கின்றது. ஆசியாவில் சீனா மற்றும் இந்தியா அதிகமாக நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடுகளாகத் திகழ்கின்றன.)**

37. கீழ்க்கண்ட எந்த நாடுகளில் தகரம் காணப்படுகிறது?

1. மியான்மர்
2. தாய்லாந்து
3. மலேசியா
4. இந்தோனேசியா

**A) அனைத்தும்** B) 1, 2, 4 C) 2, 3 D) 1, 2, 3

38. ஆசியாவின் மொத்த பரப்பளவில் எத்தனை சதவிகிதம் வேளாண்மைக்கு ஏற்ற நிலமாகக் காணப்படுகிறது?

A) 15% B) 16% C) 17% **D) 18%**

**(குறிப்பு: ஆசிய நாட்டு மக்களின் முதன்மையான தொழில் வேளாண்மை ஆகும். தெற்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்காசியாவில் காணப்படும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் செழுமையான வண்டல்மண் நிலங்களாகும்.)**

39. ஆசியாவிலேயே மிக அதிகமான பயிர்செய்ய ஏற்ற நிலப்பரப்பைக் கொண்டுள்ள நாடு __________ ஆகும்.

A) சீனா

B) மியான்மர்

C) தாய்லாந்து

**D) இந்தியா**

**(குறிப்பு: ஆசியாவின் முக்கிய உணவுப்பயிர்கள் நெல் மற்றும் கோதுமை ஆகும். பருவமழை பெய்யும் ஆசியப் பகுதிகள் நெல் விளைய ஏற்ற பகுதிகளாகத் திகழ்கின்றன.)**

40. ஈராக் நாட்டில் வேளாண் நடவடிக்கைகள் எந்த ஆறுகளிலிருந்து பெறப்படும் நீரினைப் பொறுத்து அமைகின்றன?

A) டைக்ரிஸ், ஹோவாங்கோ

**B) யூப்ரடிஸ், டைக்ரிஸ்**

C) எனிசி, யூப்ரடிஸ்

D) ஓப், எனிசி

**(குறிப்பு: ஈராக் நாட்டில் வேளாண் நடவடிக்கைகள் மழைப்பொழிவு மற்றும் யூப்ரடிஸ், டைக்ரிஸ் ஆறுகளிலிருந்து பெறப்படும் நீரினைப் பொறுத்தே அமைகின்றன.)**

41. பனாவ் படிக்கட்டு முறை நெல் விவசாயம் கடல்மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் அமைந்துள்ளது?

A) 1424 மீ

**B) 1524 மீ**

C) 1554 மீ

D) 1642 மீ

**(குறிப்பு: இப்கௌஸ் என்ற பிலிப்பைன்ஸ் மக்களால் 2000 ஆண்டுகளுக்கு முன் இது உருவாக்கப்பட்டதாகும்.)**

42. ________ தென்கிழக்கு ஆசியாவின் அரிசிக் கிண்ணம் என அழைக்கப்படுகிறது.

A) பிலிப்பைன்ஸ்

**B) தாய்லாந்து**

C) மலேசியா

D) இந்தோனேசியா

**(குறிப்பு: அதிக மழைப்பொழிவு, செழுமை வாய்ந்த சமவெளிகள் மற்றும் மனித வளம் ஆகியவற்றைப் பெற்றிருப்பதால் பருவமழை பெய்யும் ஆசியப் பகுதிகள் நெல் விளைய ஏற்ற பகுதிகளாகத் திகழ்கின்றன.)**

43. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) கோதுமை ஆசியாவின் மிதவெப்ப மண்டல பகுதிகளில் விளைகின்றது.

B) ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அதிக அளவு கோதுமையை உற்பத்தி செய்கின்றன.

**C) உலகின் மூன்றில் ஒரு பங்கு பருத்தி இந்தியாவில் விளைகின்றது.**

D) ஆசியாவில் அதிக அளவில் பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகள் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் கஜகிஸ்தான்.

**(குறிப்பு: உலகின் மூன்றில் ஒரு பங்கு பருத்தி ஆசியாவில் விளைகின்றது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் அதிக அளவில் சணல் உற்பத்தி செய்கின்றன.)**

44. இயற்கை ரப்பர் உற்பத்தியில் முதன்மையாக விளங்கும் நாடுகள் எவை?

A) மலேசியா, ரஷ்யா

B) மலேசியா, சீனா

C) சீனா, ரஷ்யா

**D) மலேசியா, தாய்லாந்து**

**(குறிப்பு:மேற்காசிய நாடுகளில் ஈரான் பேரீச்சம் பழங்களை அதிகம் விளைவிக்கின்றன.)**

45. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) சீனா மற்றும் ஜப்பான் மீன்பிடித் தொழிலில் முன்னனி நாடுகளாக திகழ்கின்றன.

B) கம்போடியாவில் உள்ள 'டோன் லே சாப்' ஏரி உலகின் மிகச்சிறந்த நன்னீர் மீன்பிடி ஏரியாகும்.

C) மீன்பிடித்தல் மாலத்தீவுகளின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுகிறது.

**D) முத்துக்குளித்தல் மேற்கு அரேபியக் கடற்கரையில் பிரசித்து பெற்று விளங்குகின்றது.**

**(குறிப்பு: முத்துக்குளித்தல் கிழக்கு அரேபியக் கடற்கரையில் பிரசித்து பெற்று விளங்குகின்றது. இந்தியா, இலங்கை, மியான்மர் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் வங்காள விரிகுடாவில் சிறந்த மீன்பிடித்தளங்களை பெற்றுள்ளன.)**

46. இந்தியாவின் முக்கிய தொழிற்பிரதேசங்களில் தவறானது எது?

1. மும்பை 2. கோயம்புத்தூர் 3. பெங்களூரு

4. சோட்டாநாக்பூர் 5. அகமதாபாத்

A) 2, 5 B) 2 மட்டும்

C) 5 மட்டும் **D) எதுவுமில்லை**

47. மஞ்சூரியன், ஷங்காய் - வியூஹன், பீகிங் - ஷென்யாங், குவான்டோன் - ஹாங்காங் ஆகிய பகுதிகள் எந்த நாட்டின் முக்கியத் தொழிற்பிரதேசங்களாகும்?

A) ஜப்பான்

B) ரஷ்யா

**C) சீனா**

D) மியான்மர்

**(குறிப்பு: டோக்கியோ, யோக்கோஹாமா மற்றும் ஒசாகா - கியோட்டோ பகுதிகள் ஜப்பானின் முக்கியத் தொழிற்பகுதிகளாகும்.)**

48. எந்த ஒரு நாட்டிற்கும் பொருளாதார முன்னேற்றத்தின் முதுகெலும்பாக விளங்குவது __________ ஆகும்.

A) தொழில்நுட்பம்

B) வணிகம்

C) ஏற்றுமதி

**D) போக்குவரத்து**

**(குறிப்பு:ஆசியாவில் காணப்படும் மிகப் பொதுவான போக்குவரத்து சாலைப் போக்குவரத்து ஆகும்.)**

49. ஆசிய நெடுஞ்சாலை ________ நாடுகளின் வழியே கடந்து செல்கின்றது.

A) 28 B) 30 **C) 32** D) 35

**(குறிப்பு: ஆசிய நெடுஞ்சாலை கிழக்கில் டோக்கியோவையும் மேற்கில் துருக்கியையும், வடக்கில் ரஷ்யாவையும், தெற்கில் இந்தோனேசியாவையும் (1,41,000 கி.மீ) இணைக்கின்றது.)**

50. ஆசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் மிக நீளமான நெடுஞ்சாலையான AH1 எந்த இரு பகுதிகளை இணைக்கிறது?

A) ஆக்ரா – இலங்கை

B) சீனா – ஜப்பான்

C) லெனின் கிரேட் – விளாடிவோஸ்டாக்

**D) டோக்கியோ – துருக்கி**

**(குறிப்பு: AH1 ன் நீளம் 20,557 கி.மீ)**

51. இந்தியாவிலுள்ள ஆக்ராவிலிருந்து இலங்கையிலுள்ள மதாரா வரை செல்லும் ஆசிய நெடுஞ்சாலை

A) AH 55 B) AH 53 C) AH 45 **D) AH 43**

**(குறிப்பு: AH 43ன் நீளம் 3024 கி.மீ.)**

52. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) உலகிலேயே நீண்ட இருப்புப்பாதை வழித்தடம் டிரான்ஸ் - சைபீரியன் இருப்புப்பாதை ஆகும்.

B) டிரான்ஸ் - சைபிரியன் இருப்புப்பாதை லெனின்கிரேட் மற்றும் விளாடிவோஸ்டாக் ஆகியவற்றை இணைக்கிறது.

**C) டிரான்ஸ் ஆசியா இருப்புப்பாதை சீனாவை, துருக்கியுடன் இணைக்கிறது.**

D) சின்கான்வென் எனப்படும் அதிவிரைவு புல்லட் இரயில் ஜப்பானிலுள்ள ஒசாகா மற்றும் டோக்கியோ இடையில் பயணிக்கிறது.

**(குறிப்பு: டிரான்ஸ் ஆசியா இருப்புப்பாதை சிங்கப்பூரை, துருக்கியிலுள்ள இஸ்தான்புல்லுடன் இணைக்கிறது. சின்கான்வென் புல்லட் ரயிலின் வேகம் 352 கி.மீ/மணி ஆகும்.)**

53. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. நன்னம்பிக்கை முனை வழி, ஐரோப்பாவைத் தெற்கு ஆசியாவுடன் இணைக்கின்றது.

2. டிரான்ஸ் பசிபிக் வழி கிழக்காசியத் துறைமுகங்களை மேற்கு அமெரிக்க நாடுகளின் துறைமுகங்களுடன் இணைக்கின்றது.

3. சூயஸ் கால்வாய் வழி உலக வர்த்தக வழியின் நடுவே பயணித்து ஐரோப்பாவை தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடன் இணைக்கிறது.

**A) அனைத்தும்**

B) 2, 3 சரி

C) 1, 3 சரி

D) 1 மட்டும் சரி

**(குறிப்பு: டோக்கியோ, ஷங்காய், சிங்கப்பூர், ஹாங்காங், சென்னை, மும்பை, கராச்சி மற்றும் துபாய் ஆகியன ஆசியாவின் முக்கியத்துறைமுகங்களாகும்.)**

54. கூற்று 1: உலகில் சுமார் பத்தில் ஆறு பங்கு மக்கள்தொகை ஆசியாவில் காணப்படுகின்றது.

கூற்று 2: ஆசியாவின் மொத்த மக்கள்தொகையில் ஐந்தில் மூன்று பங்கு மக்கள் சீனா மற்றும் இந்தியாவில் வசிக்கின்றனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

**(குறிப்பு: வங்காளதேசம், இந்தோனேசியா, ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் மக்கள்தொகை 100 மில்லியனுக்கு அதிகமாக உள்ளது.)**

55. ஆசியாவின் மக்கள் அடர்த்தி ஒரு சதுர கிலோமீட்டருக்கு ________ நபர்கள் ஆகும்.

A) 134 **B) 143** C) 154 D) 164

**(குறிப்பு: இந்தியா, ஜப்பான், வங்காளதேசம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் மிக அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்டுள்ளன. ஆசியாவின் உட்பகுதிகளில் மக்கள் அடர்த்தி மிகக்குறைந்து காணப்படுகிறது.)**

56. கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட், இரண்டாம் சூரியவர்மன் மன்னரால் எந்த ஆண்டு கட்டப்பட்டது?

A) கி.பி 1010 B) கி.பி 1080

**C) கி.பி 1100** D) கி.பி 1110

**(குறிப்பு: அங்கோர்வாட் உலகப் பாரம்பரிய தளமாகும். கெமர் மொழியில் அங்கோர்வாட் என்றால் கோயில்களின் நகரம் எனப்பொருள். இதுவே உலகின் மிகப்பெரிய கோயிலாகும்.)**

57. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) ஆசியா மூன்று நாகரிகங்களின் தாயகமாகும்.

B) உலக அதிசயங்களில் இரண்டு அதிசயங்கள் ஆசியாவில் உள்ளன.

**C) கம்போடியா நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வானுயர்ந்த மண் கோபுரத்தைக் கட்டினர்.**

D) ஆசியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய இருப்புப்பாதை போக்குவரத்து வலையமைப்பு இந்தியாவில் காணப்படுகிறது.

**(குறிப்பு: ஏமன் நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வானுயர்ந்த மண் கோபுரத்தைக் கட்டினர்.)**

58. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) ஆசியாவில் யாங்கி, டிராகன் நடனம், கபாகி போன்ற நடனங்கள் கிழக்காசியாவில் புகழ்பெற்ற நடனங்கள் ஆகும்.

B) தாய்லாந்தின் ராம் தாய், இந்தியாவில் பாங்க்ரா, கதக் மற்றும் பரதநாட்டியம் ஆகியவை ஆசியாவின் முக்கிய நடனங்கள் ஆகும்.

C) மேற்கு ஆசியாவில் சூஃபி இசை மற்றும் அரேபிய பாரம்பரிய இசை போன்றவை பொதுவாகக் காணப்படுகின்றன.

**D) பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம் யாங்கி ஆகும்.**

**(குறிப்பு: பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம் டினிக்லிங் ஆகும். அரிசி, கோதுமை, சோளம் மற்றும் பார்லி ஆகியன ஆசியாவின் முதன்மையான உணவுகளாகும்.)**

59. கீழ்க்கண்டவற்றுள் ஆசியாவின் அறுவடைத் திருவிழாக்கள் எவை?

1. நடு இலையுதிர்கால பண்டிகை - சீனா, வியட்நாம், தைவான்
2. ஹோலி, மகரசங்கராந்தி/பொங்கல் – இந்தியா
3. சுக்கோத் – இஸ்ரேல்
4. விளக்குத் திருவிழா – தைவான்

A) அனைத்தும்

B) 1, 2, 4

C) 2, 3, 4

**D) 1, 2, 3**

**(குறிப்பு: பனிச்சிற்ப விழா, சீனப்புத்தாண்டு, தைப்பூசம், தீபாவளி, தைவான் விளக்குத் திருவிழா, சங்கிரான் மற்றும் குளிர்கால விளக்குத் திருவிழா போன்றன ஆசியாவின் புகழ்பெற்ற திருவிழாக்களாகும்.)**

60. இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் கீழ்க்கண்ட எந்த காலநிலை நிலவுகிறது?

A) கோடைகால மழை, வறண்ட குளிர்காலம்

**B) அதிக வெப்பநிலை, அதிக மழைப்பொழிவு**

C) தீவிரமான காலநிலை

D) வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம்

**(குறிப்பு: அதிக வெப்பநிலை, அதிக மழைப்பொழிவு காலநிலையில், பசுமைமாறாத் தாவரங்கள்- மஹோகனி, ரப்பர், செம்மரம், சால் ஆகிய தாவரங்களும், காண்டாமிருகம், உராங்குடான், கோமோடோ டிராகன், புலி, பாபிரூஸா ஆகிய விலங்கினங்களும் வாழ்கின்றன.)**

61. இலையுதிர்காடுகளில் காணப்படும் தேக்கு, சந்தனம், மூங்கில் ஆகியவை எந்த காலநிலை உள்ள இடங்களில் காணப்படுகின்றன?

**A) கோடைகால மழை, வறண்ட குளிர்காலம்**

B) அதிக வெப்பநிலை, அதிக மழைப்பொழிவு

C) தீவிரமான காலநிலை

D) வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம்

**(குறிப்பு: கோடைகால மழை, வறண்ட குளிர்காலம் நிலவும் காலநிலையில் புலி, யானை, இந்திய நாகப்பாம்பு, விரியன் பாம்பு ஆகிய விளங்கினங்கள் காணப்படுகின்றன. இந்தியா, வியட்நாம், தெற்கு சீனா, கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இக்காலநிலை நிலவுகிறது.)**

62. சப்பாத்திக் கள்ளி, பேரீச்ச மரங்கள், முட்புதர்கள், கருவேலமரம் ஆகிய தாவரங்கள் எந்த காலநிலையில் வளர்கின்றன?

A) கோடைகால மழை, வறண்ட குளிர்காலம்

B) அதிக வெப்பநிலை, அதிக மழைப்பொழிவு

**C) தீவிரமான காலநிலை**

D) வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம்

**(குறிப்பு: அரேபிய பாலைவனம், வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியா ஆகிய பகுதிகளில் இக்காலநிலை நிலவுகிறது. பாக்டிரியன், ஒட்டகம், மண் கௌதாரி, பாலைவனமான் ஆகிய விலங்கினங்கள் இங்கு காணப்படுகின்றன.)**

63. மிதவெப்ப கோடைகாலமும் குளிர்கால மழைப்பொழிவும் கீழ்க்கண்ட எந்த நாடுகளில் காணப்படுகிறது?

1. இஸ்ரேல் 2. லெபனான்

3. துருக்கி 4. சிரியா

**A) அனைத்தும்** B) 1, 2, 4 C) 1, 2, 3 D) 2, 3

**(குறிப்பு: இக்காலநிலை கொண்ட நாடுகளில் அத்தி, ஆலிவ், சிட்ரஸ் பழங்கள் போன்ற தாவரங்களும் லிங்க்ஸ், ஜேக் முயல் போன்ற விலங்கினங்களும் வாழ்கின்றன.)**

64. கிழக்கு சீனா, ஜப்பான், வட மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் கீழ்க்கண்ட எந்த காலநிலை நிலவுகிறது?

A) நிரந்தர பனிப் படர்வு

B) மிதவெப்ப கோடைகாலமும் குளிர்கால மழைப்பொழிவும்

C) நீண்ட வரண்ட குளிர்காலம், குறுகிய, குளிர்ச்சியான கோடைகாலம்

**D) வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம்**

**(குறிப்பு: செர்ரி, ஆப்ரிகாட், பிளம் ஆகிய தாவரங்களும், பெரிய பாண்டாக்கரடி, ஜப்பானிய மகாக்யூ போன்ற விலங்கினங்களும் இந்நாடுகளில் காணப்பபடுகின்றன.)**

65. சைபீரியா, இமயமலை போன்ற இடங்களில் காணப்படும் தாவரங்களில் தவறானது எது?

A) பைன் B) ஃபிர் C) ஸ்புரூஸ் **D) லிச்சன்**

**(குறிப்பு: சைபீரியா, இமயமலை பகுதிகளில் நீண்ட வறண்ட குளிர்காலம், குறுகிய, குளிர்ச்சியான கோடைகாலக் காலநிலை நிலவுகிறது. சைப்பிரியப் புலி, பழுப்புக் கரடி, ஓநாய் ஆகிய விலங்கினங்கள் காணப்படுகின்றன.)**

66. லிச்சன், பாசிகள், புல் ஆகிய தாவர வகைகள் கீழ்க்கண்ட எந்த காலநிலையில் காணப்படுகின்றன?

**A) நிரந்தர பனிப் படர்வு**

B) மிதவெப்ப கோடைகாலமும் குளிர்கால மழைப்பொழிவும்

C) நீண்ட வரண்ட குளிர்காலம், குறுகிய, குளிர்ச்சியான கோடைகாலம்

D) வறண்ட குளிர்காலம், மிதவெப்ப கோடைகாலம்

**(குறிப்பு: பனி வரைக்கோட்டிற்கு அப்பால் இக்காலநிலை நிலவுகிறது. பனிக்கரடி, லெம்மிங், ஆர்டிக் நரி, கலைமான் ஆகிய விலங்கினங்கள் இங்கு காணப்படுகின்றன.)**